SOFA-I-M

<u>முதலாம் இடைப்பருவத் தேர்வு</u>

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - நான்கு - ___________

நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| --- | --- |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **5 × 1 = 5**

1. 'தரு' என்ற சொல்லின் பொருள் ________________

   அ) நாய் ஆ) கிளி இ) மரம் ஈ) ஓலை

2. 'அன்னைத் தமிழே' பாடலின் ஆசிரியர் ________________

   அ) நா. காமராசன் ஆ) பாரதிதாசன் இ) பாரதியார் ஈ) ஔவையார்

3. திணையின் உட்பிரிவு ________________ ஆகும்.

   அ) உயர்திணை ஆ) பால் இ) எண் ஈ) இடம்

4. தையலர் என்ற சொல்லின் பொருள் ________________

   அ) ஆண்கள் ஆ) முதியவர் இ) பெண்கள் ஈ) குழந்தைகள்

5. மூலிகை – பொருள் கூறுக.

   அ) நோய் தீர்க்கும் தாவரங்கள் ஆ) மரங்கள்
   இ) கொடிகள் ஈ) புதர் செடிகள்

**ஆ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** **3 × 1 = 3**

அ) இரண்டெழுத்து ஆ) கற்சிலை இ) ஒட்டியிருந்தன

**இ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** **3 × 1 = 3**

அ) உத்தரவு + இட்டார் ஆ) செவ்வாய் + கிழமை இ) பழைமை + மொழி

**ஈ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** **3 × 1 = 3**

அ) அரிய ஆ) இணைந்து இ) புகழ்

**உ) பொருத்துக.** **4 × 1 = 4**

1. விசயநகரம் - பனைமரம்
2. மாட்டந்தொழு - பூநெய்
3. பூ + நெய் - மாடு கட்டும் இடம்
4. தமிழகத்தின் தேசிய மரம் - கிருட்டிண தேவராயர்

**II. அ) பின்வரும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.** **1 × 4 = 4**

1. அன்னைத் தமிழே பாடலில் தொடங்கி 'பிறப்பெடுத்தேன்' வரை உள்ள பாடலை அடி மாறாமல் பிழையின்றி எழுதுக.

**ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடையளிக்கவும்.** 6 × 2 = 12

1. சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனை மரம் எவ்வாறு உதவுகிறது?
2. மன்னர் மகிழ்ச்சி அடையக் காரணம் என்ன?
3. முளைப்பாரி என்பது யாது?
4. “ஆநெய்”, “பூநெய்” ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?
5. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
6. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. விசயவர்த்தனர் எப்படிப்பட்ட குருவி வேண்டும் என்று கூறினார்?

**III. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்** 1 × 6 = 6

1. உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

**IV. பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. உருவத்தில் பெரியது யானை.
   ________________ கூட்டம் கூட்டமாய் வாழும். (பெயர்ச்சொல்லின் இறுதியில் ‘கள்’ சேர்த்து பன்மையாக்குக.)
2. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? (இப்புதிருக்கான விடை எழுதுக)
3. குடை, தடு (இச்சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல்லை உருவாக்கு.)
4. கம்மந்தட்டை இரண்டெடுத்து
   கணுக் கணுவா முறிச்சி வச்சி (இவ்வரிகளில் இடம் பெற்றுள்ள முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொல்லை எழுதுக.)
5. ஒக்காந்து, வாரேன் (பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றுக.)
6. யானைக்கொரு காலம் வந்தால்
   பூனைக்கொரு காலம் வரும். (இப்பழமொழியை சரியாக எழுதுக.)
7. பெண்கள் அணியும் கை ________________
8. Talk less work more. (தமிழப் பழமொழியை எழுதுக.)
9. என்னை வளர்ப்பவளே!
   என்னில் வளர்பவளே! (இப்பாடல் வரிகளில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எழுதுக.
10. அவை பறந்தன - (உயர்திணை / அஃறிணை) சரியான விடையை எழுதுக.